**24.02.2026**

**அ.வ.எண். 92/2021 C/w. 3/2022**

**வா.சா.1– திரு. வீரன், த/பெ. சுப்பன்**

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 24.02.2026 is accordance with the provision of Act X of 3331

**2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. சுப்பன் மாதாரி என்பவர் எனது தகப்பனார் ஆவார். 2 ம் பிரதிவாதியின் தகப்பனார் வா.சா.ஆ.5 ஆவணம் மூலமாக, சுப்பன் மாதாரி, மைனர்கள் திருமலைசாமி மற்றும் மருதன் ஆகியோர்களிடம் இருந்து கிரயம் பெற்றார் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.5 கிரய பத்திரம் 1973 ல் ஏற்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணம் ஏற்பட்ட போது நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில், சுப்பன் மாதாரி வகையறா செல்லிமுத்து கவுண்டருக்கு எவ்வளவு ஏக்கர் சொத்தை விற்றனர் என்று எனக்கு தெரியாது.

2. வா.சாஆ.5 மூலமாக, சுப்பன் மாதாரி வகையறா க.ச.349 நம்பர் காலையில் ஏக்கர் 3.09 சென்ட் மற்றும் க.ச.350 நம்பர் காலையில் ஏக்கர் 4.16 சென்ட், செல்லிமுத்துகவுண்டருக்கு கிரயம் கொடுத்த விவரம் எனக்கு பின்னிட்டு தெரியும் என்றால் விஸ்தீரணம் சரியாக தெரியாது. விற்பனை செய்தது தெரியும். வா.சா.ஆ.5 கிரய பத்திரத்தில், "க.ச.352 நம்பர் வண்டிப்பாதையிலிருந்து, 351 நம்பர் நாங்கள் நிறுத்தி கொண்ட பங்கில், மேல்கோட்டில் தென்வடலாக மேற்படி விவசாய பூமிகளுக்கு நீர், வண்டி, கால்நடை வகையறா ஓட்டி, தடம் நடந்துகொள்ள வேண்டியது" என கண்டுள்ளது என்றால் சரிதான்.

3. மேற்படி வண்டிப்பாதை க.ச.351/4 ஆக தனி உட்பிரிவானது என்றால் எனக்கு தெரியாது. க.ச.351/4 காலையில் வருவாய்துறையில், செல்லிமுத்துகவுண்டருக்கு மட்டும் பாத்தியம் என்றால் எனக்கு தெரியாது. நாங்கள் போய்க்கொண்டிருந்தோம். 2002 ல் செல்லிமுத்துகவுண்டர், அவரது மகன்களான 1, 2 பிரதிவாதிகளுக்கு 11.09.2002 தேதியில் 2 தான செட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தி கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. இரு தான செட்டில்மெண்ட்

பத்திரத்தின் அடிப்படையில், க.ச.எண்.351/4 காலையானது, பிரதிவாதிகளுக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியம் என்றால் எனக்கு தெரியாமல் ஆவணம் ஏற்படுத்தி உள்ளனர். மேற்படி உட்பிரிவை ரத்து செய்யக்கோரி நான் வட்டாட்சியரிடம் மனு கொடுத்துள்ளேனா என்றால் ஆமாம். மேற்படி மனு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. நான் எப்போது வட்டாட்சியரிடம் மனு கொடுத்தேன் என்றால் வழக்கிற்கு முன்பாக மனு கொடுத்தேன். வட்டாட்சியரிடம் மனு கொடுத்த விவரத்தை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் சாட்சியத்தின் போது தான் வட்டாட்சியரிடம் மனு கொடுத்ததாக சொல்கிறேன் என்றும், அவ்வாறு மனு நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மனு கொடுத்துள்ளேன். மேற்படி தான செட்டில்மெணட் ஆவணத்திற்கு பின்னிட்டு, 1, 2 பிரதிவாதிகள் சிட்டா, அடங்கல், அ-பதிவேடு ஏற்பட்ட விவரம் எனக்கு 2002 ம் ஆண்டிலேயே தெரியும் என்றால் தெரியாது. தடத்தில் செல்ல கூடாது என தடுத்த பின்னிட்டு தான் தெரிய வந்தது.

5. அ.வ.எண்.92/2021 ல் வழக்குரை தாக்கல் செய்த போது 2ம் பிரதிவாதி சிவசுப்பிரமணியம் தடுத்ததாக ஆரம்பத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். இருவரும் தடுத்தனர். அ.வ.எண்.3/2022 வழக்கில் எனக்கு அறிவிப்பு வந்த பின்னிட்டு தான் சிவசுப்பிரமணியத்தை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்தேன் என்றால் ஆமாம். சிவசுப்பிரமணியத்தை இந்த வழக்கில் சேர்த்த பின்னிட்டு, திருத்தப்பட்ட வழக்குரையில் அவர் எந்த தேதியில் தடுத்தார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என்னை தடுத்தார்.

6. 2ம் பிரதிவாதி சிவசுப்பிரமணியம் அவரது பங்கில் தென்னை மரங்கள் வைத்துள்ளார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு க.ச.எண்.351/4 காலையில் உள்ள தடம் மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான். அந்த தடம் வழியாக தான் தோப்பில் உள்ள தென்னை மரங்களை லாரி மூலம் எடுத்து வருவார் என்றால் சரிதான். அவ்வாறு கொண்டு செல்லும் போது, 20.12.2021 தேதியில் நான், 2ம் பிரதிவாதியின் வாகனத்தை தடுத்து நிறுத்தினேன் என்றால் இல்லை. அவ்வாறு

நிறுத்திய பின்னிட்டு தான் 2ம் பிரதிவாதி சுல்தான்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் நான் தடுக்கவில்லை. காவல் நிலையத்தில் புகார் கொடுத்தனர். இருவரும் காவல் நிலையம் சென்றோம். இருவரையும் விசாரணை செய்தனர்.

7. காவல் நிலையத்தில் நீதிமன்றத்தில் சென்று பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு சொன்னார்கள் என்றால் ஆமாம். அதன் பின்னிட்டு 2ம் பிரதிவாதி என் மீது அ.வ.எண்.3/2022 இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றால் ஆமாம். அ.வ.எண்.3/2022 ல் எனக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி உத்தரவு வந்த பின்னிட்டும், நான் 2ம் பிரதிவாதிக்கு இடையூறு செய்தேன் என்றால் இல்லை. மேற்படி உத்தரவிற்கு பின்னிட்டும், நான் இடையூறு செய்ததால் அ.வ.எண்.3/2022 ற்கு பின்னிட்டு 2ம் பிரதிவாதி என் மீது சுல்தான்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் இல்லை. ஒரு முறை தான் புகார் கொடுத்தார்.

8. மேற்படி புகாரின் அடிப்படையில், CSR மனு ரசீது பதிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. நான் வழக்கு தாக்கல் செய்த முன்பும், வழக்கு தாக்கல் செய்த பின்பும் 2ம் பிரதிவாதியை இடையூறு செய்து கொண்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. க.ச.எண்.351/4 தடமானது பிரதிவாதிகளுக்கு மட்டுமே பாத்தியம் என்றும், அதில் எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. அ.வ.எண்.92/2021 வழக்கை தாக்கல் செய்ய எனக்கு முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல. அ.வ.எண்.92/2021 வழக்கில் 2ம் பிரதிவாதி என்ன இடையூறு செய்தார் என குறிப்பிட்டு சொல்லாததால் அவருக்கு எதிராக இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. அ.வ.எண்.3/2022 வழக்கானது அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur